அடிப்படை வழிகாட்டி

# வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயத்தின் சட்டமூலம்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

மே 2017

ஆரம்பநிலையாக ஆட்சியினதும், மோதல் தீர்மானத்தினதும் பிரச்சனைகள் மீது நோக்கினைக் கொண்டுள்ள சுதந்திரமானதும், கட்சி சார்பற்றதுமான தாபனமொன்றாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) விளங்குகின்றது. பொதுசன கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமானது என்ற உறுதியான நம்பிக்கையில் 1996 இல் அமைக்கப்பட்டதுடன், விமர்சிக்கப்படுவதும், மாற்று வழிகள் அடையாளங்காணப்படுவதும் அத்துடன் பரப்பப்படுவதுமான பொதுசனக் கொள்கை ஊடாக ஆராய்ச்சியினதும், ஆதரித்துவாதாடுதலினதும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு CPA அர்ப்பணிப்னைக் கொண்டுள்ளது.

6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை

தொலைபேசி: +9411 2081384, +94112081385, +94112081386

∴பக்ஸ்: +9411 2081388 Email: info@cpalanka.org

ஈமெயில்: info@cpalanka.org

முகநூல்: www.facebook.com/cpasl

டுவிட்டர்: @cpasl

## பின்னணி

இன பிரிவினை காரணமாக வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல் என்னும் நிகழ்வானது பல தசாப்தங்களாக நாடு முழுவதுமுள்ள இலங்கையர்களில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. 1970 மற்றும் 80 களில் இடம்பெற்ற "இளைஞர் கிளர்ச்சியின்" போதும் மற்றும் நீண்ட காலமாக இடம்பெற்று வந்த அரச மற்றும் அரச சார்பற்றவர்களினால் புரியப்பட்ட ஆயுத மோதல்களின் போதும் இடம்பெற்ற வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல்கள் ஆனவை நன்றாக ஆவணப்படுத்தப்பட்டுள்ள ஒரு விடயமே ஆகும். இச் சம்பவங்களை விசாரிப்பதற்காக முன்னைய அரசாங்கங்களினால் பல விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் கூட காணாமற்போக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோரின் விதி இன்னும் அறியப்படாத ஒன்றாகவே நிலைத்திருக்கிறது. அத்தகைய பல விசாரணை ஆணைக்குழுக்கள் வலுக்கட்டாயமாக அல்லது பலவந்தமாகக் காணாமற்போக்கப்படுதல் தொடர்பான பிரச்சினையை முழுமையாகத் தீர்ப்பதற்கான மற்றும் எதிர்காலத்தில் இப்பிரச்சினையினை முற்றாக ஒழிப்பதற்கான சட்டத் திருத்தங்களை விதந்துரைத்திருந்தன. இவ் விதந்துரைகளில், பெரும்பாலான சிறந்த விதந்துரைகள் தசாப்த காலங்களாக அமுல்படுத்தப்படாமலேயே காணப்படுகின்றன.

> "…இவ் ஆணைக்குழுவானது இப்பிரச்சினையை முழுமையாகத் தீர்ப்பதற்காக மற்றும் எதிர்காலத்தில் இப்பிரச்சினையினை முற்றாக ஒழிப்பதற்காக அதே போல நிலவுகின்ற இடைவெளியினை பூர்த்தி செய்வதற்காக, வலுக்கட்டயாயமாக அல்லது பலவந்தமாகக் காணாமற்போக்கப்படுதலை குற்றமாக்குவதற்கான குறிப்பான உள்நாட்டுச் சட்டவாக்கமொன்று உருவாக்கப்பட வேண்டும் என உறுதியாக விதந்துரைக்கின்றது."- **கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை,** 2011, 5.46

இலங்கை 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயத்திற்கான (ICPPED) கையெழுத்தினை இட்டதுடன் 2016 ஆம் ஆண்டு மே மாதம் அதனை தீர்மானமுறுதியாக்கம் செய்து கொண்டது. இலங்கைக்குள் இச்சமாயத்திற்கான சட்ட வலிதுடைமையினை அளிக்கும் பொருட்டு இலங்கை அரசாங்கமானது, பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி வர்த்தமானியில் இடப்பட்டு அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயத்திற்கான சட்டமூலத்தினை அறிமுகம் செய்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது (CPA) முன்மொழியப்பட்டுள்ள இச்சட்டவாக்கம் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக இவ் வழிகாட்டியினை வெளியிடுகிறது. சட்டமாக்குகின்ற செயன்முறையிலே அடுத்த அம்சமாக அமைவது குறிப்பிட்ட சட்டமூலத்திற்குரியத் திருத்தங்களுக்கான குழு நிலை

விவாதங்களினை மேற்கொள்ளுதல் ஆகும். இவ் வழிகாட்டியானது அவ் விவாதச் செயன்முறைகளிலே ஈடுபடவிருக்கின்றவர்கள் மற்றும் ஏனைய பயனாளிகளுக்கு முன்மொழியப்பட்டுள்ள இச்சட்டவாக்கத்தின் உள்ளடக்கங்களினை அறியப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டது ஆகும்.[1]
இச் சட்டமூலம் சட்டமாக உருவாக்கப்பட்டதற்கு பின்னர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது (CPA) பயனாளிகள் புதிய சட்டவாக்கம் தொடர்பில் அறிந்துள்ளனர் என்பதனை உறுதிப்படுத்துவதற்காக இவ் வழிகாட்டியினைப் புதுப்பித்து வெளியிடும்.

### *இச் சட்டமூலம் செய்கின்ற விடயங்கள் யாவை?*

1. இச் சட்டமூலமானது “வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல்” எனும் குற்றத்தினையும், ஏனைய துணைக் குற்றங்களையும் வரைவிலக்கணப்படுத்துகின்றது.
2. இச் சட்டமூலமானது காணாமற்போக்கப்பட்டவர்கள், சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆட்கள், உறவினர்கள், காணாமற்போக்கப்பட்டவர்களின் சட்டத்தரணிகள் மற்றும் இவ் சட்டமூலத்தின் கீழான ஏதேனும் குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட இலங்கை பிரசையல்லாதோர் போன்றோருக்கான புதிய உரிமைகளினை ஸ்தாபிக்கின்றது.
3. இச் சட்ட மூலமானது “வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல்” எனும் குற்றத்தினை விசாரிப்பதற்கான மற்றும் வழக்காடுவதற்கான பரஸ்பர உதவியினை வேறுபட்ட அரசுகளிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கான கட்டமைப்பினை வழங்குகின்றது.

### *இச் சட்டமூலம் “வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல்” எனும் குற்றத்தினை எவ்வாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது? [வாசகம் 3(1), 3(2) & 3(3)]*

| | வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல் | | |
|---|---|---|---|
| | வாசகம் 3(1) | வாசகம் 3 (2) | வாசகம் 3 (3) |
| **யார்** | பகிரங்க அலுவலராகவிருக்கின்ற ஆள் அல்லது அலுவலக முறையான பதவியில் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள், அல்லது அரசின் அதிகாரவளிப்புடன், ஆதரவுடன் அல்லது இசைவுடன் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள் | எவரேனும் நபர் | வாசகம் 3(1) இலே சொல்லப்பட்ட நபரின் உயரதிகாரி |
| **என்ன செய்தால்** | வேறெவரேனுமாளைக் கைது செய்தால், தடுத்துவைத்தால், தவறானமுறையில் அடைத்து வைத்தால், ஆட்கவர்ந்தால், ஆட்கடத்தினால் அல்லது அத்தகைய ஆளின் சுதந்திரத்தை வேறெவ்வகையிலும் இழப்பிக்கச் செய்தால்; **அத்துடன்** | வேறெவரேனுமாளை தவறானமுறையில் அடைத்து வைக்கின்ற, ஆட்கவர்கின்ற, ஆட்கடத்துகின்ற அல்லது அத்தகைய ஆளின் சுதந்திரத்தை வேறெவ்வகையிலும் இழப்பிக்கச் செய்கின்ற; **அத்துடன்** | ஒரு மேலதிகாரியின் பயனுறு அதிகாரத்தின் கீழான மற்றும் கட்டுப்பாட்டின் கீழான கீழ்நிலை அலுவலர்கள் (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிந்துகொண்டிருந்ததாக அல்லது புரியப்போவதாக இருந்ததாகத் தெளிவாகச் சுட்டிக்காட்டிய தகவலை |

[1] For analysis and commentary on the bill See South Asian Centre for Legal Studies, Commentary on the Bill titled International Convention for the Protection of All Persons From Enforced Disappearances, 4th May 2017, available at http://sacls.org/resources/publications/reports

| | | | |
|---|---|---|---|
| | (i) அத்தகைய கைதுசெய்தலை, தடுத்துவைத்தலை, தவறான முறையில் அடைத்து வைத்தலை, ஆட்கவர்தலை, ஆட்கடத்தலை அல்லது சுதந்திரம் இழப்பிக்கப்படுதலை ஒப்புக்கொள்வதற்கு மறுத்தால்; அல்லது (ii) அத்தகைய வேறு ஆளின் கதியை மறைத்து வைத்தால்; அல்லது, (iii) அத்தகைய வேறு ஆளின் பின்னரான அல்லது தற்போதைய இருக்குமிடத்தை வெளிவிடுவதற்குத் தவறினால் அல்லது மறுத்தால் அல்லது நியாயமான காரணமின்றி வெளிவிடுவதற்கு இயலாதிருந்தால் | (i) அத்தகைய தவறான அடைத்து வைத்தலை, ஆட்கவர்தலை, ஆட்கடத்தலை அல்லது சுதந்திரம் இழப்பிக்கப்படுதலை ஒப்புக்கொள்ள மறுக்கின்ற; அல்லது (ii) அத்தகைய வேறு ஆளின் கதியை மறைத்து வைக்கின்ற; அல்லது (iii) அத்தகைய வேறு ஆளின் பின்னரான அல்லது தற்போதைய இருக்குமிடத்தை வெளிவிடுவதற்குத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற அல்லது நியாயமான காரணமின்றி வெளிவிடுவதற்கு இயலாதிருந்தால் | அறிந்திருக்கின்ற அல்லது மனதறிய அதற்குப் பாராமுகமாகவிருக்கின்ற; வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல் என்ற தவறுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளுக்கான பயனுறு பொறுப்பையும் அவற்றின் மீதான கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கின்ற; **அத்துடன்** (1) ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்று புரியப்படுவதைத் தடுப்பதற்கு அல்லது அடக்கியொடுக்குவதற்கு அல்லது புலனாய்வுக்கும் குற்ற வழக்குத் தொடுத்தலுக்கும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரியிடம் அக்கருமத்தைச் சமர்ப்பிப்பதற்கு அவரது தத்துவத்தினுள்ளான அவசியமான மற்றும் நியாயமான வழிமுறைகளை எடுப்பதற்குத் தவறுகின்ற, |

### *இவ் சட்டமூலம் "சுதந்திரத்தினை இழத்தல்" என்பதனை எவ்வாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது?*

இவ் சட்ட மூலமானது சுதந்திரத்தினை இழத்தல் என்பதனை "ஆளொருவர் குறிப்பிட்ட ஒரு இடத்தில் அடைத்து வைக்கப்படுவதற்குச் சம்மதிக்காதவிடத்து, அத்தகைய ஆளை அவ் இடத்தில் அடைத்து வைத்தல்" என்றவாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது. *[வாசகம் 25]*

மேலும் வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல் எனும் குற்றத்தினை இழைப்பதன் நிமித்தமாக ஒரு நபரின் சுதந்திரம் இழப்பிக்கப்படக் கூடிய "தவறானமுறையில் அடைத்துவைத்தல்", "ஆட்கடத்தல்" மற்றும் "ஆட்கவர்தல்" போன்ற வேறு முறைகளினையும் இச் சட்ட மூலம் குறிப்பிடுகின்றது. இப்பிரிவில் "தவறானமுறையில் அடைத்துவைத்தல்", "ஆட்கடத்தல்" மற்றும் "ஆட்கவர்தல்" என்பன, தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகளிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளன. *[வாசகம் 3(1) & 3(2)]*

பகிரங்க அலுவலராகவிருக்கின்ற ஆள் ஒருவர் **அல்ல**து அலுவலக முறையான பதவியில் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள், **அல்லது** அரசின் அதிகாரவளிப்புடன், ஆதரவுடன் அல்லது இசைவுடன் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள் ஒருவர் வேறெவரேனுமாளை கைது செய்வதோடு அல்லது அடைத்து வைப்பதோடு அல்லது அத்தகைய ஆளின் சுதந்திரத்தை வேறெவ்வகையிலும் இழப்பிக்கச் செய்வதோடு, i), ii), iii) இலுள்ள ஏதேனுமொன்றைச் செய்யின் அவ் ஆள் இவ் குற்றத்தினைச் செய்தவராகக் கருதப்படுவார் என இச் சட்டமூலம் குறிப்பிடுகின்றது. *[வாசகம் 3(1)]*

*இவ் சட்ட மூலத்தில் வரையறுக்கப்பட்டுள்ள ஏனைய குற்றங்கள் யாவை?*

1. 3 ஆம் வாசகத்தின் கீழுள்ள ஏதேனும் தவறைப் புரிவதற்கு உதவுகின்றமை அல்லது உடந்தையளிக்கின்றமை; **அல்லது** 3 ஆம் வாசகத்தின் கீழுள்ள ஏதேனும் தவறைப் புரிவதற்கு சதி செய்கின்றமை அல்லது எத்தனிக்கின்றமை இச் சட்டத்தின் கீழ் குற்றமொன்றாகும். *[வாசகம் 4]*

   இப்பிரிவில் "உடந்தை" மற்றும் "சதி" என்பன, தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகளிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளன. இக் குற்றங்களுக்கான தண்டனையானது வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலுக்கான தண்டனையினை ஒத்ததாகும்.

2. இச்சட்டத்தின் 3 ஆம் அல்லது 4 ஆம் வாசகத்தின் கீழான தவறொன்றைப் புரிந்துள்ளவரெனச் சந்தேகிக்கப்பட்ட ஆளொருவர் உட்பட எவரேனுமாள் கீழ்வரும் செயல்களுள் ஏதேனுமொன்றைப் புரிகின்ற போது குற்றமொன்றினைப் புரிந்தவராவார்: *[வாசகம் 17]*
   - விசாரணையொன்று நடாத்தப்படுவதில் தலையிடுகின்றமை
   - கீழ்வரும் ஆட்களைக் குறிவைத்து, அழுத்தம் கொடுப்பதன் மூலம் அல்லது அச்சுறுத்தும் செயல் மூலம் விசாரணையின் முன்னேற்றத்தின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றமை
     - ❖ முறைப்பாட்டாளர்
     - ❖ சாட்சிகள்
     - ❖ காணாமற் போக்கப்பட்ட ஆளின் உறவினர்கள்
     - ❖ காணாமற் போக்கப்பட்ட ஆளின் சட்டத்தரணிகள்
     - ❖ விசாரணையில் பங்குபற்றும் ஆட்கள்

3. அலுவலகமுறையான இடாப்புக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் கீழ்வரும் செயல்கள் ஏதேனுமொன்றைச் செய்யின் குற்றமொன்றினைப் புரிந்தவராவார்: *[வாசகம் 17]*
   - எவரேனுமாளின் சுதந்திரம் இழப்பிக்கப்பட்டமையை வேண்டுமென்று பதியத் தவறுகின்றமை அல்லது செம்மையற்றதென அவர் அறிந்திருந்த ஏதேனும் தகவலைப் பதிகின்றமை
   - ஆளொருவரின் சுதந்திரம் இழப்பிக்கப்பட்டமை பற்றிய தகவலை வழங்குகின்றமைக்கான சட்டத்தேவைப்பாடுகள் திருப்திசெய்யப்பட்டுள்ளனவென்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், அத்தகைய தகவலை வழங்க மறுக்கின்றமை அல்லது செம்மையற்ற தகவலை வழங்குகின்றமை

*குற்றங்களின் தன்மை [வாசகம் 5]*

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இச்சட்டமூலத்தின்கீழான தவறொவ்வொன்றும் பிடியாணையின்றிக் கைது செய்யத்தகு தவறொன்றாகவும் (அதாவது பொலிஸ் அதிகாரி கைது செய்வதற்கான பிடியாணை இன்றியே குற்றவாளியினைக் கைது செய்யலாம்) பிணையில் விடத்தகாத தவறொன்றாகவும் காணப்படும்.

***இவ் குற்றங்களை விசாரிப்பதற்கான நியாயாதிக்கத்தினைக் கொண்டுள்ள நீதிமன்றம் யாது? [வாசகம் 6]***

இவ் சட்டமூலத்திற்கு கீழான குற்றமொன்றினை விசாரிப்பதற்கான நியாயாதிக்கத்தினை பின்வரும் சூழ்நிலைகளில் மேல்நீதிமன்றம் கொண்டிருக்கும்.

1. குற்றம் இலங்கையின் ஆள்புல எல்லைக்குள் இடம்பெற்றிருப்பின்;
2. குற்றம் இலங்கையின் ஆள்புல எல்லைக்கு வெளியில் இடம்பெற்றிருப்பின் கீழ்வரும் சூழ்நிலைகளில்,
   - தவறாளர் (அவர் இலங்கைப் பிரசையாக இருப்பினுஞ் சரி அல்லவாயினுஞ் சரி) இலங்கையின் நியாயாதிக்கத்தின் கீழுள்ள ஏதேனும் ஆள்புலத்தில் இருப்பின்.
   - தவறாளர் இலங்கைப் பிரசையாக, அல்லது சமவாயத்துக்குத் திறத்தவரொருவராகவுள்ள வேறோர் அரசின் நாட்டினத்தவராகவிருப்பின், அல்லது அவர் அவரது வழமையான வதிவிடத்தை இலங்கையில் கொண்டுள்ள நாடற்ற ஆளொருவராக இருப்பின்;
   - அத்தகைய செயல் கீழ்வருவன மீது அல்லது கீழ்வருவனவற்றிற்கு எதிராகப் புரியப்படும் போது:
     - ❖ இலங்கைக் கொடியைப் பறக்கவிட்டிருக்கும் கப்பல் அல்லது
     - ❖ தவறு புரியப்படும் நேரத்தில் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வானூர்தி
   - எவ்வாளுக்கு எதிராகத் தவறு புரியப்பட்டுள்ளதென கூறப்படுகின்றதோ அவ்வாள் இலங்கைப் பிரசையாகவிருப்பின்

***எவ்வகையான நபர்களின் உரிமைகள் இவ் சட்டமூலத்தின் கீழ் பாதுகாக்கப்படுகின்றன?***

இச் சட்டமூலமானது காணாமற்போக்கப்பட்டவர்கள், சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆட்கள், உறவினர்கள், காணாமற்போக்கப்பட்டவர்களின் சட்டத்தரணிகள் மற்றும் இச் சட்டமூலத்தின் கீழான ஏதேனும் குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட இலங்கை பிரசையல்லாதோர் போன்ற பிரிவினரின் உரிமைகளினை உத்தரவாதப்படுத்தியுள்ளது.

- *காணாமற்போக்கப்படுதலினால் பாதிக்கப்பட்டோரின் உரிமைகள்*

1. ***பாதிக்கப்பட்டோர் என்பவர் யார்?***

- காணாமற்போக்கப்பட்ட நபர்
- வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலின் நேரடி விளைவாகத் தீங்குற்ற எவரேனும் தனி நபர் *[வாசகம் 25]*

2. ***பாதிக்கப்பட்டோருக்கான உரிமைகள் யாவை?***

- வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலின் சூழ்நிலைகள் தொடர்பான உண்மையை தெரிந்து கொள்ளும் உரிமை
- சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின் முன்னேற்றமும் பெறுபேறுகளும் பற்றிய உண்மையினை அறிந்து கொள்ளும் உரிமை
- காணாமற்போக்கப்பட்ட ஆளின் கதி பற்றிய உண்மையை அறிந்து கொள்வதற்கான உரிமை
- 3 ஆம் பிரிவின் கீழ் புரியப்பட்ட தவறுகளின் சூழ்நிலைகளையும், காணாமற்போக்கப்பட்ட ஆட்களின் கதியையும் நிலைநாட்டுகின்ற நோக்கத்துடன் தொடர்புபட்ட ஒழுங்கமைப்புக்களையும் கழகங்களையும்

அமைப்பதற்கான உரிமை, அவற்றில் சுதந்திரமாகப் பங்குபற்றுவதற்கான உரிமை மற்றும் 3 ஆம் பிரிவின்கீழ் புரியப்பட்ட குற்றங்களினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்கான உரிமை (இவ் உரிமைகள் ஏனைய சட்டங்களினால் இடப்பட்டுள்ள மட்டுப்பாடுகளுக்கமைவானது) *[வாசகம் 14]*

- காணாமற் போக்கப்பட்ட ஓர் ஆளினைத் தேடுவதற்காக சேகரிக்கப்பட்ட தரவுகளை பாதுகாத்துக் கொள்கின்றமைக்கான மற்றும் அந்தரங்கம் பேணுவதற்கான உரிமை. *[வாசகம் 19]*

காணாமற்போக்கப்பட்ட ஓர் ஆளினைத் தேடுவதற்காகவென சேகரிக்கப்பட்ட அல்லது பரிமாற்றப்பட்ட மருத்துவ மற்றும் மரபணுத் தரவுகள் உள்ளடங்கலான தனிப்பட்ட தகவல்களினை கீழ்வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்த கூடாது.

- ❖ காணாமற்போக்கப்பட்ட ஆளைத் தேடுகின்ற நோக்கங்களைத் தவிர்ந்த வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுதல் அல்லது கிடைக்கக்கூடியனவாக்கப்படுதல்;
- ❖ ஆளொருவரின் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் அல்லது மதிப்பையும் மீறுகின்ற அல்லது மீறுகின்ற பயன்கொண்ட முறையில் சேகரிக்கப்படுதல், செய்முறைப் படுத்தப்படுதல், பயன்படுத்தப்படுதல் அல்லது தேக்கி வைக்கப்படுதல்.

எவ்வாறெனினும் இவ் உரிமைகள் இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறொன்று தொடர்பாகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் தகவல்களைப் பயன்படுத்துவதற்கு அல்லது நட்டஈடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையைப் பிரயோகிப்பதனைத் தடுக்காது.

**3. சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளின் கடமைகள் யாவை?**

- ஆளொருவர் 3 ஆம் பிரிவின் கீழ் தவறொன்றுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளாரென நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளவிடத்து, முறையான முறைப்பாடெதுவும் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்திலும், விசாரணையொன்றினைப் பொறுப்பேற்று நடாத்த வேண்டும்.
- காணாமற்போக்கப்பட்ட ஆளைத் தேடுவதற்கும் அவர் இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பதற்கும் தேவையான எல்லா வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும்.
- இரகசியத் தடுப்பில் வைக்கப்பட்டுள்ள ஆளொருவரினை விடுவிக்கச்செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- மரணம் ஏற்பட்டுள்ள பட்சத்தில், அத்தகைய ஆள் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து, அவருக்கு மரியாதை செலுத்தி, அவரின் எச்சங்களைத் திருப்பி ஒப்படைப்பதற்குத் தேவையான எல்லா வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும்.

இச் சட்டமூலமானது "சட்ட வலுவுறுத்தல் அதிகாரி" என்பதனை ஒரு பொலிஸ் அலுவலர் அல்லது ஒரு தவறு புரியப்பட்டமை பற்றிய புலனாய்வு செய்வதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆள் அல்லது நிறுவனம் என்று வரைவிலக்கணப்படுத்துகின்றது. *[வாசகம் 25]*

## *சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட நபர்கள் [வாசகம் 15]*

### ***1. சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட நபர் என்பவர் யார்?***

ஆளொருவர் குறிப்பிட்ட ஒரு இடத்தில் அடைத்து வைக்கப்படுவதற்குச் சம்மதிக்காதவிடத்து, அத்தகைய ஆளை அவ் இடத்தில் அடைத்து வைக்கும் போது அவ் ஆள் சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட நபர் எனப்படுவார். [*வாசகம் 25*]

### *2. சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட நபரினுடைய உரிமைகள் யாவை?*

- எந்த ஒரு நபரும் இரகசியத்தடுப்பில் வைத்திருக்கப்படுதல் ஆகாது.
  "இரகசியத் தடுப்பு" என்பது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடமாக இராததும், அவ்வாள் இருக்குமிடம் அல்லது அவரது கதி அவரது உறவினர்களினால் அல்லது ஏனையோரினால் அறியப்படாதிருக்கின்றதுமான ஒரு இடத்தில் நபரொருவரை வைத்திருத்தல் என்றவாறு வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. [*வாசகம்* 25]
- எழுத்திலான சட்டத்தினால் நிலைநாட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு மட்டும் அமைவாக, சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட எவரேனும் ஆள், அவரது உறவினர்கள், சட்டத்தரணி அல்லது அவர் விரும்பிய வேறெவரேனும் ஆள் என்போருடன் தொடர்புகொள்வதற்கும் அவர்களினால் பார்வையிடப்படுவதற்கும் உரிமையுடையவர் ஆதல் வேண்டும்.

### 3. சட்ட வலுவுறுத்தல் அதிகாரி*களினுடைய கடமைகள் யாவை?*

- சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும், சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆட்கள் உள்ள இடங்களை அணுகுவதற்கான உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகள், சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட நபர்கள் பற்றிய புதுப்பிக்கப்பட்ட விடயங்களையும் உள்ளடக்கிய அலுவலகமுறையான இடாப்புக்கள் அல்லது பதிவேடுகள் தொகுக்கப்படுவதனையும், பேணப்படுவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.
  இவ் அலுவலகமுறையான இடாப்புக்கள் அல்லது பதிவேடுகள் எவரேனும் நீதிமுறை அல்லது வேறு தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது சட்டத்தினால் அந்நோக்கத்துக்காக அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்துக்கு கோரிக்கையின் மீது உடனடியாகக் கிடைக்கக்கூடியனவாக்கப்படுதல் வேண்டும்.
- இவ் அலுவலகமுறையான இடாப்புக்கள் அல்லது பதிவேடுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
  - ❖ சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளின் அடையாளம்;
  - ❖ அவ்வாளின் சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட திகதியும், நேரமும், இடமும் மற்றும் அவ்வாளின் சுதந்திரத்தை இழப்பித்த அதிகாரியின் அடையாளமும்;
  - ❖ சுதந்திரம் இழப்பிக்கப்படுவதற்குக் கட்டளையிட்ட அதிகாரியும், சுதந்திரம் இழப்பிக்கப்பட்டமைக்கான காரணங்களும்;
  - ❖ சுதந்திரம் இழப்பிக்கப்பட்டமையை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரி;
  - ❖ சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட இடமும், சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட இடத்துக்குச் சேர்க்கப்பட்ட திகதியும், நேரமும், சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட இடத்துக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியும்;
  - ❖ சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளின் உடல் நல நிலைமை தொடர்பான தகவல்;
  - ❖ சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட காலத்தின்போது மரணம் ஏற்படும் பட்சத்தில், மரணத்துக்கான சூழ்நிலைகளும் காரணமும், எச்சங்களின் சேரிடமும்; அத்துடன்
  - ❖ விடுவிக்கப்பட்ட அல்லது வேறோர் இடத்துக்கு இடமாற்றப்பட்ட திகதியும் நேரமும், ஆளொருவர் சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட எந்த இடத்துக்கு இடமாற்றப்படுகின்றாரோ அந்தச் சேரிடமும், இடமாற்றத்துக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியும்.

*உறவினர்கள், பிரதிநிதிகள் மற்றும் சட்டத்தரணிகள் [வாசகம் 16(1)]*

***1. உறவினர்கள், பிரதிநிதிகள் மற்றும் சட்டத்தரணிகள் ஆகியோரின் உரிமைகள் யாவை?***

- கீழ்வருவன தொடர்பான தகவல்களை அணுகுவதற்கான உரிமை:
  - ❖ சுதந்திரம் இழப்பிக்கப்படுவதற்குக் கட்டளையிட்ட ஆள் அல்லது அதிகாரி;
  - ❖ அவ்வாளின் சுதந்திரம் இழப்பிக்கப்பட்டு, சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட இடத்துக்கு அவர் சேர்க்கப்பட்ட திகதியும், நேரமும், இடமும்;
  - ❖ சுதந்திரம் இழப்பிக்கப்பட்டமையை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரி;
  - ❖ சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட வேறோர் இடத்துக்கு இடமாற்றப்படும் பட்சத்தில், சேரிடமும் இடமாற்றத்துக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியும் உட்பட, சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆள் இருக்குமிடமும்;
  - ❖ விடுவிக்கப்பட்ட திகதியும், நேரமும், இடமும்;
  - ❖ சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளின் உடல் நல நிலைமை தொடர்பான தகவல்;
  - ❖ சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட காலத்தின்போது மரணம் ஏற்படும் பட்சத்தில், மரணத்தின் சூழ்நிலைகளும் காரணமும், எச்சங்களின் சேரிடமும்.

*2.* ஆளொருவரின் சுதந்திரம் இழப்பிக்கப்படுவதன் சட்ட முறையான தன்மையைக் கவனத்துட்கொள்வதற்குப் பங்கமின்றி, உறவினர்கள், பிரதிநிதிகள் மற்றும் சட்டத்தரணிகள் மற்றும் புலனாய்வில் பங்குபற்றுகின்ற ஆட்கள் எவரும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்களைத் தாமதமின்றிப் பெறுகின்ற வழிவகையாக உடனடியான மற்றும் பயனுள்ள நீதிமுறைப் பரிகரிப்புக்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். பரிகரிப்புக்கான அத்தகைய உரிமை எச்சூழ்நிலைகளிலும் இடைநிறுத்தப்படுதலோ அல்லது மட்டுப்படுத்தப்படுதலோ ஆகாது

*3.* உறவினர்கள், பிரதிநிதிகள் மற்றும் சட்டத்தரணிகள் மற்றும் **<u>புலனாய்வில் பங்குபற்றுகின்ற ஆட்கள்</u>** சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளொருவர் சம்பந்தமான தகவலைத் தேடுவதன் விளைவாக ஏதேனும் இழிவான நடாத்துகை, அச்சுறுத்தல் அல்லது அழுத்தம் என்பவற்றிற்கெதிராகப் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழான தவறுகளுக்காகக் கைது செய்யப்பட்ட இலங்கைப் பிரசையல்லாதோர் [வாசகம் 7]*

இலங்கைப் பிரசையல்லாத ஒருவர் இச் சட்டமூலத்தின் கீழுள்ள குற்றங்களுக்காக கைது செய்யப்படுகின்ற போது கீழ்வரும் உரிமைகளுக்கு உரித்துடையவராவார்:

- அவர் எந்த அரசின் நாட்டினத்தவராக உள்ளாரோ அந்த அரசின் அல்லது அவரது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வேறுவகையில் உரித்துள்ள அரசின் மிக அண்மித்த பொருத்தமான பிரதிநிதியுடன் அல்லது அவர் நாடற்ற ஆள் ஒருவராக இருப்பின், அவர் எந்த அரசின் ஆள்புலத்தில் வழமையாக வதிந்தாரோ அந்த ஆள்புலத்திலுள்ள அரசின் மிக அண்மித்த பொருத்தமான பிரதிநிதியுடன் தாமதமின்றித் தொடர்புகொள்வதற்கும்;
- அந்த அரசின் பிரதிநிதியொருவரால் பார்வையிடப்படுவதற்கும்;

- மேற் கூறப்பட்டுள்ள அவரது உரிமைகள் பற்றி அறிவிக்கப்படுவதற்கும்.

### *இவ் உரிமைகள் எவ்வாறு வலுவுறுத்தப்படலாம்? [வாசகம் 20]*

வாசகம் 20(1) இன் படி, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் நீதிமுறை அல்லது வேறு பரிகரிப்புக்குப் பங்கமின்றி, நெறிமுறையான அக்கறையைக் கொண்டுள்ள எவரேனுமாள், இச்சட்டத்தின் 7, 14, 15, 16 அல்லது 19 ஆகிய பிரிவுகளை வலுவுறுத்துவதற்கு நாடி மேல் நீதிமன்றத்துக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட மனு ஒன்றின் மூலமாக விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

நெறிமுறையான அக்கறை கொண்டுள்ள எவரேனுமாள் பிரிவுகள் வலுவுறுத்தப்படாமை பற்றி அறியும் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் தாமாகவோ அல்லது அவரது சார்பில் வேறெவரேனும் ஆளின் மூலமாகவோ இவ் நியாயாதிக்கத்தினை நாடலாம்.

மேல் நீதிமன்றம் பொருத்தமானதென கருதுமிடத்து செய்யப்பட்ட மனுவொன்று தொடர்பான வழக்கு நடவடிக்கையின் எக்கட்டத்திலும் அதனை விசாரணைக்காகவும் அறிக்கைக்காகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தலாம். மேலும் அந்நோக்கத்துக்காக நீதிமன்றத்தினால் விதிக்கப்படுகின்ற அத்தகைய காலத்தினுள் அதன் அறிக்கையை மேல் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கும்படி அத்தகைய ஆணைக்குழுவைக் கோரலாம்.

மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் அதிருப்தி அடையும் எந்நபரும், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டு ஆறு வாரங்களினுள் அத்தகைய கட்டளைக்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன் முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்.

### *"வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல்" எனும் குற்றத்திற்கான தண்டனை யாது?*

வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல் என்ற தவறுக்குக் குற்றவாளியாக்கப்பட்ட ஒருவர் மேல் நீதிமன்றத்தினால் குற்றப்பகர்வின் மீதான விளக்கத்திற்கு உட்பட்ட பின்னர் கீழ்வரும் தண்டனைகளினை அனுபவிக்க வேண்டும்:

- இருபதாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனை;
- ஒரு மில்லியன் ரூபாவை (1,000,000) விஞ்சாத குற்றப்பணம்; அத்துடன்
- பாதிக்கப்பட்டவருக்கு ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் (500, 000) குறையாத நட்டஈடு *[வாசகம் 3 (1), (2) & (3)]*

## “மீள ஒப்படைத்தல்” இற்கான சட்ட ஏற்பாடுகளில் இச் சட்டமூலம் ஏற்படுத்தும் தாக்கம்

### இலங்கையில் காணப்படுகின்ற “மீள ஒப்படைத்தல்” தொடர்பான சட்டக் கட்டமைப்பு யாது?

**1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டமானது (மீள ஒப்படைத்தற் சட்டம்)** மீள ஒப்படைத்தல் தொடர்பான சட்ட ஏற்பாடுகளைக் கூறுகின்றது. இவ் சட்டத்தின் பிரிவுகளானவை:

- அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற ஒரு கட்டளையொன்றின் பேரில் பொதுநலவாய நாடுகளுக்கும்,

- அமைச்சர் இச் சட்டத்தின் ஏற்பாடுகள் குறிப்பிட்ட நாட்டிற்கு ஏற்புடையதாகும் என்பதனை வெளிப்படுத்தி வர்த்தமானியிலே ஒரு கட்டளையினை வெளியிடுவதன் பேரில், இலங்கை அரசாங்கமானது **மீள ஒப்படைத்தலிற்கான ஏற்பாடொன்றினை** மேற்கொண்டுள்ள எந்தவொரு நாட்டிற்கும்

ஏற்புடையதாகும்.

### இச் சட்டமூலம் எவ்வாறு மீள ஒப்படைத்தற் சட்டத்திலே தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது?

இச் சட்டமூலம் மீள ஒப்படைத்தற் சட்டத்திலே 3 பிரதான மாற்றங்களினை ஏற்படுத்துகின்றது;

<u>முதலாவதாக</u>

வாசகம் 11 இன் படி, வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயமானது, இலங்கைக்கும் எந்தவொரு சமவாய அரசிற்கும் இடையிலான மீள ஒப்படைத்தலிற்கான ஏற்பாடொன்றாகக் கருதப்படலாம்.

அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் சான்றுப் படுத்துகின்ற, வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயத்துக்கான திறத்தவர்களாகவுள்ள அரசுகள் “சமவாய அரசு” எனப்படும். *(வாசகம் 2)*

<u>இரண்டாவதாக</u>

இச் சட்டமூலத்தின் விளைவாக, கீழ்வரும் சந்தர்ப்பங்களில் இச் சட்டமூலத்தில் வரையறுக்கப்பட்டுள்ள குற்றங்களுக்காக இலங்கையிலிருந்தும் மற்றும் இலங்கைக்கும் மீள ஒப்படைத்தல் சாத்தியமானதாக அமையும்:

- எந்தவொரு சமவாய அரசிற்கும் (இலங்கைக்கும் குறிப்பிட்ட அச்சமவாய அரசிற்கும் இடையில் மீள ஒப்படைத்தலிற்கான ஏற்பாடொன்று இருப்பினும் சரி, இல்லாவிடினும் சரி)
- இச் சட்டமூலத்திலே குற்றமாக வரையறுக்கப்பட்டுள்ள, குற்றமென்ற பரப்புக்குள் உள்ளடக்கப்படுகின்ற குற்றமொன்றினை, அங்கீகரித்துள்ள எந்தவொரு பொதுநலவாய நாட்டிற்கும். *(வாசகம் 10, 11 மற்றும் 12)*

<u>மூன்றாவதாக</u>

இச் சட்டமூலத்திலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் குற்றத்திற்காக மீள ஒப்படைத்தல் கோரப்படுகின்ற போது அத்தகைய கோரிக்கையானது, குறிப்பிட்ட குற்றம் அரசியல் குணநலன்கொண்ட தவறொன்று அல்லது அரசியல் தவறொன்றுடன் சம்பந்தப்பட்ட தவறொன்று அல்லது அரசியல் உள் நோக்கங்களினால் உந்தப்பட்ட தவறொன்று என்ற அடிப்படையில் மறுக்கப்படலாகாது *(வாசகம்* 13)